**சுற்றறிக்கை இலக்கம் - EP/PPSC/01/2015**

பிரதம செயலாளர்,
செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
கிழக்கு மாகாணம்

**<u>கிழக்கு மாகாண பொதுச் சேவைக்குட்பட்ட பதவிகளில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை நடாத்துதல்</u>**

அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 06/2006 இற்கமைய தயாரிக்கப்பட்ட கிழக்கு மாகாண பொதுச் சேவைக்குட்பட்ட பதவிகளுக்கான ஆட்சேர்ப்புத் திட்டங்களில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கமைய வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை நடாத்துவதற்காக முன்வைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட முன்மொழிவுகள் தொடர்பாக கௌரவ கிழக்கு மாகாண ஆளுநரது அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

| தொ. இல. | இதுவரைக்கும் நடைமுறையில் இருந்த ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கமைய | புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்திற்கமைய |
|---|---|---|
| 01 | முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை முழுமையாக சித்தியடையாத அல்லது முதலாவது தடைப்பரீட்சைக்கு இதுவரைக்கும் தோற்றாத உத்தியோகத்தர்கள் | பதவிக்குரிய தரம் III/II இற்கான முழுமையான வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். |
| 02 | முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை முழுமையாக சித்தியடைந்த உத்தியோகத்தர்கள் | பதவிக்குரிய தரம் III/II இற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலிருந்து விலக்களிக்கப்படுவர். |
| 03 | பாடத்திட்டமானது புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பாடத்திட்டத்திற்கு வித்தியாசமாக இருந்தால், முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் ஒரு பாடமாவது சித்தியடையாத உத்தியோகத்தர்கள் | பதவிக்குரிய தரம் III/II இற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் அனைத்துப் பாடங்களுக்கும் தோற்ற வேண்டும். |
| 04 | பாடத்திட்டமானது புதிய ஆட்சேர்ப்பு திட்டத்தின் பாடத்திட்டத்திற்கு சமமாக இருந்தால், முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் ஒரு பாடமாவது சித்தியடையாத உத்தியோகத்தர்கள் | பதவிக்குரிய தரம் III/II இற்கான முழுமையான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்திபெறாத பாடத்திற்கு மட்டும் தோற்ற வேண்டும். |
| 05 | இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் முழுமையாக சித்திபெற்ற உத்தியோகத்தர்கள் | பதவிக்குரிய தரம் II/I இற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையினால் விலக்களிக்கப்படுவர். |
| 06 | இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் முழுமையாக அல்லது ஒரு பாடமாவது சித்தியடையாத உத்தியோகத்தர்கள் மற்றும் இதுவரைக்கும் தோற்றாத உத்தியோகத்தர்கள் | பதவியில் தரம் II/I இற்கு பதவி உயர்த்தப்பட்ட பின்னர் அப்பதவிக்குரிய தரம் II/I இற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். |
| 07 | இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையினை சித்திபெறாத காரணத்தினால் சம்பள ஏற்றங்கள் இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள். | வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை சித்தியடைய வேண்டிய காலம் புதிய ஆட்சேர்ப்பு திட்டம் நடைமுறைக்கு வரும் திகதி வரை நீக்கப்பட்டுள்ளது. |
| 08 | பாடத்திட்டமானது புதிய ஆட்சேர்ப்பு | பதவிக்குரிய தரம் II/I இற்கான வினைத்திறன்காண் |

| | | |
|---|---|---|
| | திட்டத்தின் பாடத்திட்டத்திற்கு வித்தியாசமாக இருந்தால், இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் ஒரு பாடமாவது சித்தியடையாத உத்தியோகத்தர்கள் | தடைப்பரீட்சையில் அனைத்துப் பாடங்களுக்கும் தோற்ற வேண்டும். |
| 09 | பாடத்திட்டம் புதிய ஆட்சேர்ப்பு திட்டத்தின் பாடத்திட்டத்திற்கு சமமாக இருந்தால், இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் ஒரு பாடமாவது சித்தியடையாத உத்தியோகத்தர்கள் | பதவிக்குரிய தரம் II/I இற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்திபெறாத பாடங்களுக்கு மட்டும் தோற்ற வேண்டும். |
| 10 | சில பதவிகளுக்கு மற்றும் தரம் I இற்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை நடாத்தப்பட்டது. | ஆட்சேர்ப்பு திட்டத்தினால் அல்லது அரச நிருவாக / கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கைகளினால் விலக்களிக்கப்படாமல் இருந்தால் புதிய ஆட்சேர்ப்பு திட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் தரம் I க்கு பதவி உயர்த்தப்படுவதிலிருந்து ஐந்து வருட (05) செயற்திறன் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவையைப் பூரணப்படுத்தி ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்துப் பெற்ற உத்தியோகத்தர்கள் புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சையினை சித்தியடைவதிலிருந்து விலக்களிக்கப்படுவர்.<br><br>புதிய ஆட்சேர்ப்பு திட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் தரம் I க்கு பதவி உயர்த்தப்படுவதிலிருந்து ஐந்து வருட (05) செயற்திறன் மிக்கதும் திருப்திகரமானதுமான சேவையைப் பூரணப்படுத்தாத ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்துப்பெறாத உத்தியோகத்தர்களை புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கமைய தரம் I இற்குரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சையினை சித்தியடைவதற்கு புதிய ஆட்சேர்ப்பு திட்டம் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து ஐந்து (05) வருட சலுகைக் காலம் வழங்கப்படும். |

கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் மற்றும் தங்கள் அமைச்சு / அலுவலகத்தினால் எதிர்காலத்தில் நடாத்தப்படும் அனைத்து வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகளுக்கும் மேற்குறிப்பிட்ட அனுமதிக்கப்பட்ட விதிகளைப் பின்பற்றுவதற்காக, தங்களது அமைச்சு / அலுவலகத்தின் கீழுள்ள அனைத்து திணைக்களங்கள்/நிறுவனங்கள்/அலுவலகங்கள் அனைத்துக்கும் அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திசாநாயக்க,**
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்